வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 18.04.2026 சனிக்கிழமை இதழ் : 102 பக்கங்கள் : 08




## நிலக்கரி இறக்குமதியில் ஊழல் நடைபெறவில்லை

### அமைச்சர் விஜிதஹேரத் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 18

நிலக்கரி இறக்குமதியின் போது எவ்வித ஊழலும் நடைபெறவில்லை என்றும், எனினும் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி தரம் குறைந்த மட்டத்தில் இருந்ததை ஏற்றுக் கொள்வதாகவும் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தனது பதவியை இராஜினாமா செய்தமை தொடர்பில், அமைச்சர்கள் பலரின் பங்கேற்புடன் அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நிலக்கரி கொள்வனவு குறித்து விசாரணை நடத்த நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவிடம், நிலக்கரி தொடர்பான ஊழல்கள் குறித்து எவரேனும் தகவல் அறிந்திருந்தால் அதனை வழங்க முடியும் என்றும் அவர் இதன்போது மேலும் குறிப்பிட்டார். (அ)

### நிலக்கரி இறக்குமதி விவகாரம்

# எரிசக்தி அமைச்சர், செயலாளர் நேற்றுத் திடீரென பதவி விலகல்!

### ஜனாதிபதி ஆணைக்குழு நியமனத்தை அடுத்து

கொழும்பு, ஏப். 18

நிலக்கரி இறக்குமதி தொடர்பான செயல்முறையை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பக்கச்சார்பற்ற மற்றும் சுயாதீன விசாரணைக்கு இடமளிக்கும் வகையில், வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி மற்றும் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதயங்க ஹேமபால ஆகியோர் நேற்று பிற்பகல் தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் இவர்கள் தமது இராஜினாமா கடிதங்களை சமர்ப்பித்துள்ளனர்.

நிலக்கரி இறக்குமதி மற்றும் அது சார்ந்த மின்சார உற்பத்தியின்போது ஏதேனும் முறைகேடுகள் அல்லது சட்டவிரோதச் செயல்கள் இடம்பெற்றுள்ளனவா என்பது குறித்து விசாரணை நடத்துவதற்காக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் நேற்று விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

இந்த ஆணைக்குழுவின் விசாரணைகள் பக்கச்சார்பற்ற முறையிலும் சுதந்திரமாகவும் முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்தும் நோக்கில், அதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலேயே இவர்கள் பதவிலகியுள்ளனர். (அ)



## விகாராதிபதியின் முறைப்பாட்டால் தையிட்டி காணி அளவீடு நிறுத்தம்!

### ஏமாற்றத்துடன் திரும்பினர் மக்கள்



யாழ்ப்பாணம், ஏப். 18

தையிட்டி விகாரை அமைந்து ள்ள மக்களின் காணிகளை அளவீடு செய்யும் நடவடிக்கை, விகாரதிபதியின் பொலிஸ் முறைப்பாட்டை அடுத்து நேற்று கைவிடப்பட்டது. தமது காணிகள் அளவீடு செய்யப் படும் என்ற நம்பிக்கையில் நேற்றுக் காலை முதல் அங்கு கூடிய

07

## நிலக்கரி கொள்வனவு குறித்து விசாரிக்க முழு அதிகாரம் கொண்ட ஆணைக்குழு!

### ஜனாதிபதி அநுரகுமார நியமித்தார்

கொழும்பு, ஏப். 18

நிலக்கரியின் தரம் மற்றும் கொள்முதல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழுவின் தலைவராக உயர்நீதிமன்ற நீதியரசர் கிஹான் குலதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

செயலாளராக முன்னாள் அமைச்சின் செயலாளர் பி.வி. பந்துலசேன நியமிக்கப்படுள்ளார்.

உறுப்பினர்களாக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்

07

## தையிட்டி விகாரை காணியை அளவிட அனுமதிக்கமாட்டேன்!

### விகாராதிபதி திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 18

தையிட்டி விகாரை அமைந்துள்ள காணிகளை அளவீடு செய்வதை தடுத்து நிறுத்தக் கோரி விகாராதிபதி பலாலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தையிட்டி விகாரை அமைந்துள்ள காணியின் உரிமையாளர்களில் 17 பேரின் காணிகளை நேற்று வெள்ளிக்கிழமை அளவீடு செய்வது எனவும்,

07

## வடமராட்சியில் ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகள் பெற்ற தாய்!

யாழ்ப்பாணம், ஏப். 18

வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று வடக்கு பகுதியைச் சேர்ந்த இளம் தம்பதியினருக்கு ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகள் பிறந்துள்ள நெகிழ்ச்சியான சம்பவம் நேற்று பதிவாகியுள்ளது.

செம்பியன்பற்று வடக்கு பிரதேசத்தைச் சேர்ந்த இந்த இளம் குடும்பத்துக்கு நேற்று நடைபெற்ற பிரசவத்தில் நான்கு குழந்தைகள் கிடைத்துள்ளன. ஒரே நேரத்தில் நான்கு குழந்தைகள் பிறந்த

07

## நாளை கொழும்பு வருகிறார் இந்தியத் துணை ஜனாதிபதி

### பம்பலப்பிட்டி கதிரேசன் கோவிலில் வழிபடுவார்

கொழும்பு, ஏப். 18

இலங்கைக்கு வருகைதரவிருக்கும் இந்திய துணை ஜனாதிபதி சி.பி.இராதாகிருஷ்ணன் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு பம்பலப்பிட்டி கதிரேசன் கோவிலில் மத வழிபாடுகளில் ஈடுபடவிருப்பதுடன், புதிய கதிரேசன் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கோவில் அறங்காவலர் சபை உறுப்பினர்கள் மற்றும் இந்திய வம்சாவளி பிரமுகர்களுடனான சந்திப்பிலும் கலந்துகொள்ளவுள்ளார்.

07

## லால் காந்தவின் சொத்துக்கள் குறித்து விசாரணை நடத்த கோரி முறைப்பாடு

கொழும்பு, ஏப். 18

விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் லால் காந்தவின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறித்து விசாரணை நடத்துமாறு கோரி, இலஞ்ச அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடொன்று அளிக்கப்பட்டுள்ளது.

வைத்திய மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்திய சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர், வைத்தியர் சமல் சஞ்சீவவினால் இந்த

07

## எரிசக்தி அமைச்சின் செயலராக அபோன்சு



கொழும்பு, ஏப். 18

ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க, ஜி.எம்.ஆர்.டி. அபோன்சுவை எரிசக்தி அமைச்சின் புதிய செயலாளராக நியமித்துள்ளார்.

07

## இலங்கை பொருளாதார மீட்சிக்கு சர்வதேச நாணய நிதியம் பாராட்டு!

கொழும்பு, ஏப். 18

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் 2026 வசந்தகாலக் கூட்டத் தொடரில் இலங்கை தூதுக்குழுவினர் மிக முக்கியமான ஆலோசனைகளை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தலைமையிலான குழுவினர், சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் சிரேஷ்ட தலைவர்களுடன் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளனர்.

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

# இராணுவ புலனாய்வு தொடர்பு குறித்து உடனடி விசாரணை செய்ய கோரிக்கை

கொழும்பு, ஏப். 18

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்துக்கு பின்னால் இராணுவ புலனாய்வு பிரிவைச் சேர்ந்த சிலர் தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளதால், இது தொடர்பில் உடனடி மற்றும் சுயாதீன விசாரணை மேற்கொள்ள வேண்டும் என சிவில் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர் சிரந்த அரசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால கடந்த வாரம் பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு, குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றை சமர்ப்பித்த பின்னர் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

அவர் கூறுகையில்-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 2017 ஆம் ஆண்டு முதல் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டதாகவும், ஆரம்ப காலத்தில் சஹ்ரானுக்கு பின்னால் குறிப்பிடத்தக்க ஆதரவு இல்லை என்றும் குறிப்பிட்டார். ஆனால் 2018 பெப்ரவரி மாதம் தெல்தெனிய மற்றும் அம்பாறை பகுதிகளில் ஏற்பட்ட இனஅமைதிக்கேடு சம்பவங்கள், சஹ்ரானுக்கு ஆதரவாளர்களை திரட்ட வாய்ப்பாக அமைந்ததாக அவர் தெரிவித்தார்.

மேலும், அந்தக் கலவரங்களுக்கு "மஹசோன் பலகாய" என்ற அமைப்பு தொடர்புடையதாகவும், அந்த அமைப்பு சமீபத்தில் திருகோணமலை பகுதியில் பதற்றத்தை உருவாக்கி அரசாங்கத்தை நிலையற்றதாக்க முயற்சித்து வருவதாகவும் குற்றம் சாட்டினார்.

2018 சம்பவங்களுக்காக அமித் வீரசிங்க கைது செய்யப்பட்டதையும், அவரது ஆதரவாளர்கள் திருகோணமலை சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இராணுவ புலனாய்வு அதிகாரி சுரேஷ் சாலே உள்ளிட்ட சிலர் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என 2021 நவம்பர் 15 அன்று குற்றப்புலனாய்வு துறையில் முறைப்பாடு செய்திருந்தாலும், இதுவரை எந்த முன்னேற்றமும் இல்லை என அவர் தெரிவித்தார்.

அத்துடன், சஹ்ரான் ஒரு முறை குற்றச்செயலில் ஈடுபட்டபோது, ஒரு மேஜர் ஜெனரல் அவரை அழைத்து எச்சரித்து அனுப்பியதாகவும், இது உயிர்த்த ஞாயிறு விசாரணை ஆணைக்குழு அறிக்கையிலும் இடம் பெற்றுள்ளதாகவும் கூறினார். இதனால் "சஹ்ரான் ஒரு சாதாரண நபரா அல்லது புலனாய்வு தொடர்புடையவரா?" என்ற கேள்வி எழுகின்றது என அவர் குறிப்பிட்டார்.

மேலும், சுரேஷ் சாலேக்கு எதிராக சாட்சி வழங்க முயன்ற ஒருவருக்கு இராணுவ புலனாய்வு அதிகாரிகளால் அழுத்தம் கொடுக்கப்பட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

மஹசோன் பலகாய அமைப்புக்கும் சுரேஷ் சாலேக்கும் தொடர்பு இருக்கிறதா என்ற சந்தேகமும் எழுப்பிய அவர், திருகோணமலை சம்பவத்துடன் தொடர்புடைய குணார குணதிலக்க முன்னாள் இராணுவ அதிகாரி என்பதும் தற்போது வெளிவந்துள்ளதாக தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பின்னால் இராணுவ புலனாய்வு அதிகாரிகள் இருந்தார்களா என்பதை முழுமையாக விசாரிக்க வேண்டும் என்றும், புலனாய்வு அமைப்புகளை சீரமைக்கும் நடவடிக்கைகளை அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (அ)

# ஒரு பீப்பாய் மசகு எண்ணெயை 286 டொலருக்கு வாங்கவில்லை!

பெற்றோலிய கூட்டுத்தாபனம் மறுப்பு

கொழும்பு, ஏப். 18

ஒரு பீப்பாய் மசகு எண்ணெய்க்கு 286 டொலர் செலுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உறுதியாக மறுத்துள்ளது.

இந்த அறிக்கைகள் பொய்யானவை மற்றும் தவறாக வழிநடத்துபவை என்று விபரித்துள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இதற்குப் பொறுப்பானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளது.

சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்திற்காக மட்டுமே, மசகு எண்ணெயை இறக்குமதி செய்வதாகவும், கூறப்பட்ட விலையில் எந்தவொரு சரக்கும் வாங்கப்படவோ அல்லது ஒப்பந்தம் செய்யப்படவோ இல்லை என்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

286 டொலருக்கு எண்ணெய் வாங்கப்பட்டதாக கூறப்பட்ட தகவல்களை நிராகரித்த பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மத்திய கிழக்கில் மோதல் வெடித்த பின்னர் பெறப்பட்ட மசகு எண்ணெய் ஒரு பீப்பாய்க்கு சராசரியாக 71.99 டொலர், 111.62 டொலர், 71.81 டொலர் மற்றும் 113.29 டொலர் என விலை நிர்ணயிக்கப்பட்டதாகவும், தெரிவித்துள்ளது.

இந்த விலைகள், தற்போது நிலவும் உலகளாவிய சந்தை விலைகளுடன் ஒப்பிடும்போது சாதகமாகவே உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலையற்ற சந்தை நிலவரங்கள் இருந்தபோதிலும், மசகு எண்ணெயைப் பெறுவதில் போட்டித்தன்மை வாய்ந்த நிலையைத் தக்கவைத்துள்ளதாகவும் பெற்றோலிய கூட்டுத்தாபனம் கூறியுள்ளது. (அ)

பல்கலை விரிவுரையாளர் படுகொலை;

# மரண விசாரணை அறிக்கையை நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கவில்லை

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பீட மூத்த விரிவுரையாளரின் மரண விசாரணை அறிக்கை யாழ்.நீதவான் நீதிமன்றுக்கு இன்னமும் சமர்ப்பிக்கப்படவில்லை என மன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக சித்த மருத்துவ பீட மூத்த விரிவுரையாளர் தயாளனி திலீபன் கடந்த மார்ச் மாதம் 18ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட நிலையில் தனங்கிளப்பு பகுதியில் உள்ள பற்றைக்காட்டில் இருந்து சடலம் மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் விரிவுரையாளரின் மகள் மற்றும் மருமகன் ஆகியோர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ் . நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன்போது, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள விரிவுரையாளரின் மகள் மற்றும் மருமகன் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

அதனை தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணையில், விரிவுரையாளரின் சடலம், சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நியாயாதிக்க பகுதிக்குள் மீட்கப்பட்டமையால் மரண விசாரணைகள் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் முன்னெடுக்கப்பட்ட நிலையில் அது தொடர்பிலான விசாரணை அறிக்கை நேற்று முன்தினம் வரை மன்றில் சமர்ப்பிக்கப்பட வில்லை என சுட்டிக்காட்டப்பட்டது.

அதேவேளை, முதலாம் சந்தேக நபரான விரிவுரையாளரின் மருமகன் சார்பில் மன்றில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி, தனது தரப்பினர் தொடர்பில் ஊடகங்களில் தவறான செய்திகள் வெளியாகியுள்ளதாகவும், எனவே நீதிமன்றுக்கு செய்தி சேகரிக்க வரும் ஊடகவியலாளர்கள் தொடர்பில் பதிவுகளை மேற்கொள்ளவேண்டும் என மன்றில் கோரினார்.

கடந்த வழக்கு தவணையின் போது, ஊடகங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், எனவே தவறான செய்திகள் வெளியானால் அது தொடர்பில் மன்றுக்கு முறைப்படுமாறும் மன்று தெரிவித்தது.

அதனை தொடர்ந்து வழக்கை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு ஒத்திவைத்த மன்று, அன்றைய தினம் வரை சந்தேக நபர்கள் இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது. (அ)

# இலங்கை கட்டுமானத்துறைக்கு வெளிநாட்டுத் தொழிலாளர்கள்

இம்மாத இறுதியில் அமைச்சரவை பத்திரம்

கொழும்பு, ஏப். 18

இலங்கையின் கட்டுமானத் துறையில் நிலவும் பாரிய தொழிலாளர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக, வெளிநாட்டுத் தொழிலாளர்களைக் கட்டுப்படுத்தும் புதிய கொள்கைகளை அமுல்படுத்த தொழிலாளர் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போது கட்டுமான நிறுவனங்கள் அமைச்சுக்களின் நேரடிப் பரிந்துரையின் கீழ் வெளிநாட்டுத் தொழிலாளர்களைப் பணியில் அமர்த்தி வரும் நிலையில், இதனை முறைப்படுத்துவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை இம் மாத இறுதியில் அல்லது மே மாத தொடக்கத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சின் செயலாளர் எஸ்.எம். பியதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நாட்டின் கட்டுமானத்துறையில் சுமார் 10,000 வெற்றிடங்கள் காணப்படுவதுடன், 2026 ஆம் ஆண்டளவில் இந்தத் தட்டுப்பாடு 20,000 ஆக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சவாலை எதிர்கொள்ள இந்தியா, பங்களாதேஷ் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளிலிருந்து தொழிலாளர்களைத் திரட்ட நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளன. அதேவேளை, உள்நாட்டுத் தொழிலாளர்களை ஈர்க்கும் வகையில் அவர்களுக்குச் சீருடைகள், முறையான ஊதியம், மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் நிதி மேலாண்மை தொடர்பான பயிற்சிகளை வழங்க வீடமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது. (அ)

# தெதுறு ஓயாவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 8 ஆக உயர்ந்தது!

கொழும்பு, ஏப். 18

தெதுறு ஓயாவில் மூழ்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 6 ஆக அதிகரித்துள்ளது.

தெதுறு ஓயாவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நீராடச் சென்ற 15 பேரில் 10 பேர் நீரில் மூழ்கி விபத்துக்குள்ளானார்கள். நீரில் மூழ்கியவர்களில் இருவர் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலை அனுமதிக்கப்பட்டதுடன் இருவரது சடலங்கள் மீட்கப்பட்டன.

இதனையடுத்து நீரில் மூழ்கிக் காணாமல்போனவர்களில் மேலும் 6 பேரின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன் மூலம், இந்த அனர்த்தத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 8 ஆக உயர்ந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# நிலக்கரி தரப் பரிசோதனை நிலையங்களுக்கு அங்கீகாரத்தை கட்டாயமாக்க அரசு தீர்மானம்

கொழும்பு, ஏப். 18

நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்திற்குத் தரமற்ற நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டதால் ஏற்பட்டுள்ள பாரிய நட்டத்தைத் தொடர்ந்து, நிலக்கரி தரப் பரிசோதனை நிலையங்களுக்கான அங்கீகாரத்தை கட்டாயமாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை அங்கீகாரச் சபை மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கு இடையே உயர்மட்டப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் தற்போது நிலக்கரி தரப் பரிசோதனைக்கான அங்கீகாரம் கட்டாயமாக்கப்படவில்லை என்பதையும், இலங்கை தர நிர்ணய நிறுவனம் போதிய வசதிகள் இல்லாத காரணத்தினால் இவ்வாறான சோதனைகளை முன்னெடுப்பதில்லை என்பதையும் அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் வரை இறக்குமதி செய்யப்பட்ட 12 நிலக்கரி கப்பல்களின் தரச் சான்றிதழ்கள், இந்தோனேசியாவின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்ட ஒரு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டமை அண்மையில் கணக்காய்வு அறிக்கையின் மூலம் அம்பலமானது.

எனவே வருங்காலத்தில் சர்வதேச தரத்திலான உள்நாட்டுப் பரிசோதனை மையங்களை உருவாக்கவும், கடுமையான சட்டதிட்டங்களை அமுல்படுத்தவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
18.04.2026 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 05

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## ஜனாதிபதி அநுர குமாரவுக்கு "கம்பன் புகழ் விருது"

அகில இலங்கை கம்பன் கழகம் ஏப்ரல் 30 தொடக்கம் மே 3 வரை 2026 கம்பன் விழாவை கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் விமரிசையாக நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. விழாக்களைச் சிறப்புற நடத்துவதில் கம்பன் கழகத்துக்கு ஒரு தனித்துவமான பெயர் இருக்கிறது.

கம்பன் விழாக்களில் சமூகத்தின் பல்வேறு துறைகளையும் சேர்ந்த ஆளுமைகளுக்கு விருது வழங்கிக் கௌரவிப்பது வழமை. இந்த தடவை விருது பெறுபவர்களில் மிகவும் முக்கியமானவர் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க.

இன வேற்றுமையால் பிளவுண்டு கிடந்த தேசத்தை ஒற்றுமைப்படுத்துவேன் என்று உறுதி தந்து தேசத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்ற ஆண்மையாளரான ஜனாதிபதிக்கு "கம்பன் புகழ் விருது 2026" வழங்கப்படவிருப்பதாக கம்பன் கழகம் அறிவித்திருக்கிறது.

"வரலாற்றை மாற்றியவன்" என்ற மகுடத்திலேயே இந்த விருது அவருக்கு வழங்கப்படுகிறது.

இது தவிர. முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரியவுக்கு " அரசியல் பண்பாளர் "என்ற மகுடத்தில் கம்ப கலாநிதி இரா. இராதா கிருஷ்ணன் விருதை வழங்க விருப்பதாகவும் கம்பன் கழகம் அறிவித்திருக்கிறது. நாட்டின் ஜனாதிபதிக்கும் ஜனாதிபதியாக வருவதற்கான சகல பண்புகளையும் தகுதிகளையும் கொண்டவர் என்று பரவலாகக் கருதப்படுகின்ற ஜெயசூரியவுக்கும் கம்பன் கழகம் விருது வழங்குவது பெரிதும் வரவேற்கத்தக்கது.

"தேசத்தை ஒற்றுமைப்படுத்துவேன்" என்று உறுதி தந்து தேசத்தின் தலைமையை ஏற்றவர் என்று கம்பன் கழகம் புகழாரம் சூட்டும் ஜனாதிபதி திஸாநாயக்க சமூகங்களை ஒற்றுமைப்படுத்துவதற்கு உருப்படியான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை என்ற மனக்குறை தமிழ் மக்களுக்கு இருக்கிறது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் எம்மால் கூறாமல் இருக்க முடியவில்லை. அவருக்கு விருது வழங்கப்படுவதை குறைகூறும் நோக்கில் இந்த கருத்து முன்வைக்கப்படுவதாக பண்பட்ட கம்பன் கழகத்தவர்கள் கருதமாட்டார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

ஜே.வி.பி./ தேசிய மக்கள் சக்தியின் தலைவராக இருக்கும் ஜனாதிபதி தித்நாயக்க சகல சமூகங்களையும் சமத்துவமாக நடத்துவதே அரசாங்கத்தின் கொள்கை என்று பிரகடனம் அடிக்கடி பிரகடனம் செய்கிறார். ஆனால், அந்த " சமத்துவம்" நடைமுறையில் எந்த இலட்சணத்தில் இருக்கிறது என்பதை தேசிய மக்கள் சக்தியின் கடந்த்19 மாத கால ஆட்சியில் காணக்கூடியதாக இருக்கிறது. அரசாங்கத்தினால் நியமிக்கப்படும் உயர்மட்ட செயலணிகளில் சிறுபான்மைப் பிரதிநிதித்துவத்தை பூதக்கண்ணாடி கொண்டே தேட வேண்டும்.

வரலாற்றை மாற்றியவன் என்று கம்பன் கழகம் போற்றும் திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பிறகு தேசிய இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வு குறித்து எதையும் பகிரங்கமாகப் பேசவில்லை. இனப் பிரச்னைக்கு அதிகாரப் பரவலாக்கலின் அடிப்படையில் தீர்வைக் காண்பதற்கு இதுகாலவரையில் மேற்கொள்ளப்பட்ட சகல முயற்சிகளையும் எதிர்த்த வரலாற்றைக் கொண்ட ஜே.வி.பி. திஸாநாயக்கவின் தலைமையில் கூட அந்த வரலாற்றை மாற்றுவதற்கு இன்னமும் தயாராயில்லை.

வடக்கு. கிழக்கு மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கல் தேவையில்லை என்று ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா உட்பட அந்த கட்சியின் பல்வேறு தலைவர்கள் கூறும் போது அதை மறுத்து ஜனாதிபதி ஒரு வார்த்தை பேசியதாக நாம் அறியவில்லை.

சிறுபான்மைச் சமூகங்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதை உறுதியாக எதிர்க்கும் பெரும்பான்மைச் சமூகத்தினர் மத்தியில் மன மாற்றத்தைக் கொண்டுவர வேண்டிய பொறுப்பு கம்பன் கழகம் வரலாற்றை மாற்றியவன் என்று அழைக்கும் திசநாயக்கவுக்கு இருக்கிறது.

ஆனால். பெரும்பான்மைச் சமூகத்தின் மத்தியில் சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளுக்கு எதிராக நிலைபெற்றுவிட்ட உணர்வுகளைப் பயன்படுத்தி முன்னைய ஆட்சியாளர்கள் அரசியல் அதிகாரத்தைத் தக்க வைத்த ஆரோக்கியமற்ற போக்கில் இருந்து வேறுபட்ட முறையில் செயற்படுவதற்கான ஆர்வத்தை ஜனாதிபதி திசநாயக்கவோ அல்லது தேசிய மக்கள் சக்தி அரசாங்கமோ இதுவரையில் காண்பிக்கவில்லை. கம்பன் புகழ் விருதைப் பெறும் ஜனாதிபதி இனிமேலாவது அந்த ஆர்வத்தை வெளிக்காட்டி சிறுபான்மைச் சமூகங்களின் நம்பிக்கையை வென்றெடுப்பார் என்று நம்புவோமாக!

# புத்தாண்டு காலப்பகுதியில் மாத்திரம் 42 விபத்துக்களில் 44 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 18

இம்மாதம் ஏப்ரல் 10 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மாத்திரம் நாடளாவிய ரீதியில் 42 உயிரிழப்பை ஏற்படுத்தக் கூடிய வீதி விபத்துக்களில் சிக்கி 44 பேர் உயிரிழந்தனர் என்று போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்பு பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் சேனாதீர தெரிவித்தார்.

பொலிஸ் ஊடகப் பிரிவில் வியாழக்கிழமை நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பொதுமக்கள் புத்தாண்டு கொண்டாட்டங்களில் ஈடுபட்டிருந்தாலும், பொலிஸார் எப்போதும் விழிப்புடன் இருந்து கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர். விசேடமாக வீதி போக்குவரத்து சட்டங்கள் மற்றும் குற்றவியல் சட்டங்களை மிகக் கடுமையான முறையில் நடைமுறைப்படுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளோம். குறிப்பாக, மதுபோதையில் அல்லது போதைப்பொருள் பயன்படுத்தி வாகனங்களை செலுத்த வேண்டாம் என தொடர்ச்சியாக எச்சரிக்கின்றோம். இளைஞர்கள் வீதிகளில் மோட்டார் சைக்கிள்களின் முன் சக்கரத்தை உயர்த்திக் கொண்டு சாகசங்களில் ஈடுபட முயற்சிக்க வேண்டாம்.

அதேபோல் ஓட்டோக்களை இரு சக்கரங்களில் ஓட்டி "ஹீரோ" ஆக முயல வேண்டாம். இவ்வாறான ஆபத்தான செயல்களில் ஈடுபடுபவர்களை கண்காணிப்பதற்கு பொதுமக்களுக்கு "வட்ஸ்அப்" இலக்கம் ஒன்றை வழங்கியுள்ளோம். விதிமீறல்கள் தொடர்பான காணொலிகளை, குறித்த இடம் மற்றும் நேரத்தை குறிப்பிட்டு எமக்கு அனுப்பி வையுங்கள். இதுவரை எமக்குக் கிடைத்த 23 வீடியோக்களில் 11 சம்பவங்கள் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு, வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர்கள் நீதிமன்றிலும் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு புத்தாண்டு காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், இம்முறை விபத்து மரணங்கள் ஓரளவு குறைவடைந்துள்ளன. கடந்த ஆண்டு ஏப்ரல் 13, 14, 15 ஆகிய மூன்று நாட்களில் 26 மரணங்கள் பதிவாகியிருந்தன. இம்முறை அது 19 ஆகக் குறைந்துள்ளது. எனினும், 10 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதிவரையான ஆறு நாட்களுக்குள் நாடளாவிய ரீதியில் உயிரிழப்பை ஏற்படுத்தக் கூடிய 42 விபத்துக்கள் பதிவாகின. இதன்போது 44 பேர் உயிரிழந்தனர். அவ்வாறு உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் மோட்டார் சைக்கிள் சாரதிகளாவர்.

மேலும் வாகனங்களின் புகை வெளியேற்றம் மற்றும் இலக்கத் தகடுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தியுள்ளோம்.

சில வாகன உரிமையாளர்கள் தரமற்ற மற்றும் விவரம் தெளிவாகத் தெரியாத வகையில் இலக்கத் தகடுகளை மாற்றியமைக்கின்றனர். இரவு நேரங்களில் இவ்வாறான வாகனங்களை அடையாளம் காண்பது கடினம். சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்களே பெரும்பாலும் இவ்வாறு செய்கின்றனர். இவ்வாறான வாகனங்களுக்கு 15 ஆயிரம் முதல் 25 ஆயிரம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும். மேலும், அதிகமாக புகையை வெளியேற்றும் வாகனங்கள் தொடர்பில் தகவல் வழங்க 070,3552525 என்ற வட்ஸ்அப் இலக்கத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளோம். சூழல் மாசுபடுவதைத் தடுக்க பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்"- என்றார். (எ)

# செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை ஒப்படைப்பதற்கு ஈரான் சம்மதம்

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தகவல்

வாஷிங்டன், ஏப். 18

ஈரான் தனது கையிருப்பில் உள்ள செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை ஒப்படைக்க ஒப்புக்கொண்டுள்ளது என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

வியாழக்கிழமை இந்தத் தகவலை வெளியிட்ட ட்ரம்ப், ஈரானிய யுரேனியத்தை "அணுசக்தி தூசி" என்று குறிப்பிட்டார்.

மத்திய கிழக்கை உலுக்கி வரும் போரை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்காவும் ஈரானும் ஓர் அமைதி உடன்படிக்கையை நெருங்கிவிட்டதாகவும் ட்ரம்ப் தெரிவித்தார்.

ஈரான் நிரந்தரமாக அணு ஆயுதம் தயாரிப்பதை கைவிடவேண்டும் என்பதில் ட்ரம்ப் உறுதியாக உள்ளார்.

இந்த நிலையில், ஈரான் உடன்படிக்கைக்கு வர மறுத்தால், அதன் துறைமுகங்கள் மீது கடற்படை முற்றுகை தொடரும் என்றும், உட்கட்டமைப்புகள் மீது வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்படும் என்றும் அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் ஹெக்செத் எச்சரித்துள்ளார்.

இந்த பேச்சுவார்த்தைகள் பாகிஸ்தானில் நடைபெற வாய்ப்புள்ளது. உடன்படிக்கையில் கையெழுத்திட தான் பாகிஸ்தான் செல்லவும் தயாராக இருப்பதாக ட்ரம்ப் கூறியுள்ளார்.

மற்றொரு முக்கிய முன்னேற்றமாக, இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் இடையே 10 நாட்கள் போர் நிறுத்த ஒப்பந்தம் வியாழக்கிழமை முதல் அமுலுக்கு வந்துள்ளதாக அறிவித்திருந்த ட்ரம்ப், இன்னும் 4 அல்லது 5 நாட்களில் இரு நாட்டுத் தலைவர்களும் சமாதான பேச்சுவார்த்தைக்காக வெள்ளை மாளிகைக்கு வரவுள்ளார்கள் என்றும் ட்ரம்ப் தெரிவித்தார்.

இஸ்ரேலிய தாக்குதல்கள் நிறுத்தப்பட்டால், தாங்களும் போர் நிறுத்தத்தை மதிப்போம் என்று ஈரானின் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா அமைப்பு தெரிவித்துள்ள நிலையில் பேச்சுவார்த்தைக்கான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# இந்தோனேசிய கடற்படை கப்பல் கொழும்பு வந்தது

கொழும்பு, ஏப். 18

இந்தோனேசிய கடற்படையைச் சேர்ந்த கடேற் அதிகாரிகள் உட்பட 26 வெளிநாடுகளைச் சேர்ந்த கடேற் அதிகாரிகளுடன், இந்தோனேசிய கடற்படைக் கப்பலான "கிரி பீம சுசி - 945" நல்லெண்ணப் பயணமாகக் கொழும்பு வந்தடைந்தது.

இலங்கை கடற்படையினர் கடற்படை மரபுகளுக்கமைய கொழும்பு துறைமுகத்தில் அக்கப்பலை வரவேற்றனர்.

இரு நாடுகளின் கடற்படைகளுக்கு இடையிலான நட்புறவை மேம்படுத்துவதற்காக இலங்கை கடற்படையால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளில் அவர்கள் பங்கேற்பதுடன், நாட்டின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று முக்கிய இடங்களைப் பார்வையிடவும் அக்கப்பலின் குழுவினர்கள் திட்டமிட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஏப்ரல் - 18 சனிக்கிழமை
விசுவாவசு வருடம் - சித்திரை 05
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : பிரதமை




**மேடம்**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து போகும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போங்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வரக்கூடும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**இடபம்**
எதையும் சாதிக்கும் துணிச்சல் பிறக்கும். பெற்றோரின் ஆதரவு பெருகும். உத்தி யோ கத்தில் தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள். மதிப் புக் கூடும் நாள்.

**மிதுனம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வியாபாரத்தில் உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும். அதிரடி மாற்றம் உண்டாகும்.

**கடகம்**
குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பம் அனைத்தும் நீங்கும். தள்ளிப்போன விஷயங்கள் எளிதில் முடியும். தொழிலில் லாபம் பெருகும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் கொஞ்சம் அலைச்சலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியிருக்கும். பொறுமை தேவைப்படும்.

**கன்னி**
உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகளின் பொறுப்புணர்வு அதிகமாகும். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு.

**துலாம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். அரசால் அனுகூலம் உண்டு. உத்தியோகத்தில் அதிகாரிகள் புது பொறுப்பை ஒப்படைப்பார். தொட்டது துலங்கும் நாள்.

**விருட்சிகம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**தனுசு**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். நல்லன நடக்கும்.

**மகரம்**
உங்கள் பேச்சில் அனுபவஅறிவு வெளிப்படும். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும்.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் வேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதங்கள் ஏற்படும். அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும்.

# போதைப்பொருள் கடத்திய பத்து படகுகள் பறிமுதல்!

## 44 பில்லியன் ரூபாய் பெறுமதியான போதைப்பொருட்கள் கைப்பற்றல்

கொழும்பு, ஏப். 18
இந்த ஆண்டின் கடந்த மூன்று மாத காலப்பகுதியில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட 10 மீன்பிடி படகுகள் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டன என்று கடற்படை ஊடகப் பேச்சாளர் புத்திக சம்பத் தெரிவித்தார்.

போதைப்பொருள் கடத்தப்பட்ட மற்றுமொரு மீன்பிடி படகு நேற்று வெள்ளிக்கிழமை திக்கோவிட்ட துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

குறித்த படகுகளில் இருந்து ஐஸ், ஹெரோயின், ஹசீஸ் மற்றும் கொக்கெய்ன் உள்ளிட்ட பிரதான போதைப்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் குறித்த படகுகளில் இருந்து 1,800 கிலோ கிராமிற்கும் அதிகமான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட இந்த போதைப்பொருட்களின் சந்தைப் பெறுமதி சுமார் 44 பில்லியன் ரூபாய்க்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையை சூழவுள்ள கடற்பரப்பில் போதைப்பொருள் கடத்தலை தடுப்பதற்காக கடற்படையினர் தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவ தாகவும் அவர் மேலும் குறிப்பிட் டார்.

## தாக்குதலுக்கு தயாரான கும்பலை கைது செய்த சுன்னாகம் பொலிஸ்

யாழ்ப்பாணம், ஏப். 18




சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னாலைக்கட்டுவன் பகுதியில் வைத்து வன்முறை குழுவை சேர்ந்த மூவர் நேற்று முன்தினம் வாள்களுடன் கைது செய்யப்பட்டனர்.

குறித்த மூவரும் புன்னாலைக்கட்டுவன் பகு தியில் தாக்குதல் நடத்து வதற்கு தயாராகினர். இது குறித்து சுன்னாகம் பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

அந்தவகையில் அதிரடி நடவடிக்கையை மேற்கொண்ட பொலிஸார், இந்த தாக்குதலை முறியடித்து குறித்த சந்தேகநபர்கள் மூவரையும் மூன்று வாள்களுடன் கைது செய்தனர்.

அவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)



## சிக்னல் சந்தியில் நிழல்

யாழ்ப்பாணம், ஏப். 18
யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ள வெப்பம் காரணமாக வீதி சமிக்ஞை விளக்குகளில் காத்திருப்போருக்கு நிழல் தரும் வகையில் சாக்கு படல்கள் கட்டப்பட்டன.

நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப. மயூரனின் முயற்சியில் , பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட திருநெல்வேலி சந்தை, வீதி சமிக்ஞை விளக்கு பகுதியில் சாக்கு படல்கள் கட்டப்பட்டன. (எ-03)

# யாழில் உத்தியோகத்தர்களுக்கான நான்காம் கட்ட தெளிவூட்டல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 18
யாழ். மாவட்ட சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர்களுக்கான நான்காம் கட்ட தெளிவூட்டல் நிகழ்வு மேலதிக அரசாங்க அதிபர் க. சிவகரன் தலைமையில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனின் பங்குபற்றுதலுடன் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அரசாங்கத்தால் தற்போது அறிமுகப்படுத்துகின்ற புதிய திட்டங்கள் தொடர்பில் தெளிவூட்டல்களை வழங்கும் நோக்கில் குறித்த நிகழ்வு இவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் நான்காம் கட்டமாக உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, காரைநகர் மற்றும் நெடுந்தீவு ஆகிய பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர்களுக்கு தெளிவூட்டல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



இதன்போது மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் இ சுரேந்திரநாதனால் சமூக சக்தி குழுவின் வகிபாகங்கள் தொடர்பில், நிகழ்வில் கலந்து கொண்டிருந்த சமூக அபிவிருத்தி சபையின் செயலாளர்களான சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. (எ)

## வவுனியாவில் புகைப்பட நிலையத்தில் தீ விபத்து

### பெறுமதியான பொருட்கள் அழிவு

வவுனியா, ஏப். 18
வவுனியா முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள புகைப்பட நிலையமொன்றில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற தீ விபத்து காரணமாக நிலையத்தில் இருந்த பெறுமதியான பொருட்கள் எரிந்து சேதமடைந்தன என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பில் தகவல் கிடைத்தவுடன் பொது மக்கள் மற்றும் மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினரும் இணைந்து செயல்பட்டு தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆரம்ப கட்ட விசாரணைகளின் அடிப்படையில், மின்சார ஒழுக்கினால் தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொடி பெட்டியை இலக்கு வைத்து துப்பாக்கிச்சூடு!

கொழும்பு, ஏப். 18

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான "லொகு பெட்டி" யின் சகோதரரான "பொடி பெட்டி" என்பவரை இலக்கு வைத்து அஹூங்கல்லை பகுதியில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

"பொடி பெட்டி" என்பவர் ஓட்டோவில் பயணித்துக் கொண்டிருந்த போது, இனந் தெரியாத நபர்களால் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டுவிட்டு திரும்பிக் கொண்டிருந்த போதே இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதுடன், இதில் அவருக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# 400 கோடி ரூபாய் பெறுமதியான ஹெரோயின் ஆழ்கடலில் மீட்பு!

கொழும்பு, ஏப். 18

தென்பகுதி ஆழ்கடலில் கடற்படையினரால் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்ட மீன்பிடிப் படகில் இருந்த போதைப் பொருள் ஹெரோயின் என்பதும், அதன் பெறுமதி 400 கோடி ரூபாய்க்கும் அதிகம் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் அருண ஜயசேகர குறித்த போதைப்பொருள் தொகுதியை நேரில் பார்வையிட்ட பின்னர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் நடத்திய சோதனையில், குறித்த படகில் 150 கிலோ கிராமிற்கும் அதிகமான ஹெரோயின் போதைப் பொருள் இருப்பது உறுதிசெய்யப்பட்டது.

இதனையடுத்து, படகில் இருந்த 04 சந்தேகநபர்களும் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு கரைக்கு கொண்டு வரப்பட்டனர்.

இலங்கைக்கு தெற்கே ஆழ்கடல் பகுதியில் வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது, 06 உர மூடைகளில் பொதி செய்யப்பட்டிருந்த இந்த போதைப்பொருட்களுடன் படகு மற்றும் சந்தேகநபர்கள் கடற்படையினரால் பொறுப்பேற்கப்பட்டனர்.

இது குறித்து கருத்து தெரிவித்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்,

இந்த போதைப்பொருள் தொகுதி வெளிநாட்டு கப்பல் ஒன்றின் மூலமே வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பான தகவல்கள் எங்களிடம் உள்ளன. இதனடிப்படையில் சர்வதேச ரீதியிலான விசாரணைகளை முன்னெடுத்து வருகிறோம்.

தற்போது கைப்பற்றப்பட்டுள்ள 150 கிலோ கிராமிற்கும் அதிகமான ஹெரோயினின் சந்தைப் பெறுமதி 400 கோடி ரூபாய்க்கும் அதிகம். சிலவேளைகளில் இதைவிட அதிகமாகவும் இருக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

(எ)

## கொழும்பு திரும்பும் மக்களுக்காக நேற்று முதல் விசேட பஸ் சேவை

கொழும்பு, ஏப். 18

சித்திரை புத்தாண்டுக்காக தமது ஊர்களுக்கு சென்ற மக்கள் மீண்டும் கொழும்பு திரும்புவதற்காக தேவையான விசேட பஸ் சேவைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தேசிய போக்குவரத்து ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

நேற்று முதல் எதிர்வரும் திங்கட்கிழமை காலை வரையிலும் அதற்குப் பின்னரான காலப்பகுதியிலும் இந்த விசேட பஸ் சேவைகள் முன்னெடுக்கப்படும் என்று மாகும்புர பல் நிலை போக்குவரத்து மத்திய நிலையத்தின் உதவி முகாமையாளர் நிமல் வெத்தசிங்க தெரிவித்தார்.

ஊர்களுக்கு சென்ற மக்கள் பிரதான நகரங்களுக்கு வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால், பயணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப நேர அட்டவணைகளை திருத்தி குறித்த பஸ் சேவைகள் முன்னெடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

(எ)

## "சீலரத்ன தேரருக்கு உயிர் அச்சுறுத்தல்"

கொழும்பு, ஏப். 18

மக்கள் சார்பாக குரல் கொடுக்கும் ஜனசெத பெரமுன கட்சிக்கும் எனக்கும் உரிய பாதுகாப்பை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என்று பத்தரமுல்லை சீலரத்ன தேரர் வலியுறுத்தியுள்ளார். உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் உடனடியாக பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு கோரி வியாழக்கிழமை அமைச்சின் செயலாளரை நேரில் சந்தித்து கடிதம் ஒன்றை கையளித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சுக்கு வருகை தந்து தனது கோரிக்கையை முன்வைத்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

ஜனசெத பெரமுன கட்சியின் தலைவராக நான் கடந்த 2010 முதல் 2024 வரையான ஜனாதிபதி தேர்தல்களில் போட்டியிட்டுள்ளேன். பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை சந்தித்து எனக்கு பொலிஸ் பாதுகாப்பு கோரி கடிதம் வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று கட்சிப் பணிகளுக்காக அர்ப்பணிப்புடன் செயல்படும் போது எனக்குப் பல்வேறு தரப்பினரிடமிருந்து மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன.- என்றார்.

# முதலாம் தரத்துக்கான கல்வி சீர்திருத்தங்கள் அமுலாக்கம்

## விசேட அறிவிப்பு வெளியானது

கொழும்பு, ஏப். 18

2026 ஆம் ஆண்டு தரம் 1 இன் II மற்றும் III ஆம் தவணைகளுக்குரிய செயல்பாட்டுப் புத்தகங்களை விநியோகிக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதியளவில் அனைத்து பாடசாலைகளுக்கும் அவற்றை விநியோகித்து முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளார்.

தரம் 1 பாடத்திட்டம் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் ஆசிரியர் பயிற்சிகள், மாகாண ஆரம்பக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர் ஆலோசகர்கள், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

மேலதிகமாக தேவைப்படும் பயிற்சிகளை எதிர்வரும் மே 16 ஆம் திகதிக்குள் நிறைவு செய்யுமாறு மாகாண பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், தரம் 1 இன் முதலாம் தவணைக்குரிய பாடப்பரப்புகளை பூர்த்தி செய்ய முடியாத பாடசாலைகள் காணப்படின், எதிர்வரும் இரண்டாம் தவணையில் அந்தப் பாடப்பகுதிகளை பூர்த்தி செய்வதற்கு அதிபர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று அந்த வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

# சமூக சக்தி திட்டத்துக்காக ரூ. 651 மில்லியன் ஒதுக்கீடு

## யாழ். அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், ஏப். 18

சமூக சக்தி திட்டத்துக்காக யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு 651. 96 மில்லியன் ரூபாய் நிதி கிடைக்கப்பெற்றுள்ளது என்று அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர்களுக்கான தெளிவூட்டல் நிகழ்வு நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் அரசாங்க அதிபர் தலைமையுரையாற்றுகையில்,

சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர்களுக்கான தெளிவூட்டல் நிகழ்வுகள் கட்டம் கட்டமாக நடைபெற்று வருகின்றன. சமூக சக்தி திட்டத்துக்காக (பிரஜாசக்தி) யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு 651. 96 மில்லியன் ரூபாய் நிதி கிடைக்கப் பெற்றுள்ளது. 357.12 மில்லியன் ரூபாய் கிராம அலுவலர் பிரிவு எண்ணிக்கை அடிப்படையில் பங்கீடு செய்து வழங்கப்படவுள்ளது. மிகுதியாகவுள்ள 294.84 மில்லியன் ரூபாய் நிதி தங்களது பல் பரிமாண வறுமை ஒழிப்பை நடைமுறைப்படுத்துவதற்காக சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர்களிடமிருந்து கிடைக்கப் பெறும் திட்டத்தின் அடிப்படையில் அந்தந்த பிரதேச செயலர் பிரிவுகளுக்கு பங்கீடு செய்து வழங்கப்படும்- என்றார். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நான்கு நாட்களில் மட்டும் 20 பேர் நீரில் மூழ்கிப்பலி!

கொழும்பு, ஏப். 18
கடந்த 12 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரையிலான நான்கு நாட்களில் மட்டும், நீரில் மூழ்கி 20 பேர் துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்தனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எவ். யு. வுட்லர் தெரிவித்தார்.

நீச்சல் தெரியாமை, ஆள் நடமாட்டமற்ற பாதுகாப்பற்ற இடங்களில் நீராடுதல் மற்றும் மதுபோதையில் நீரில் இறங்குதல் என்பனவே இத்தகைய மரணங்களுக்கு முக்கிய காரணங்களாகும். பொதுமக்கள் நீராடுவதற்கு முன்னர் அதற்காக ஒதுக்கப்பட்ட பாதுகாப்பான இடங்களைத் தெரிவு செய்ய வேண்டும். உயிர்காப்புப் பிரிவினர் பணியில் இருக்கும் இடங்களை உறுதிப்படுத்திக் கொள்வதுடன், அங்குள்ள எச்சரிக்கை பலகைகள் மற்றும் அறிவுறுத்தல்களை கண்டிப்பாக பின்பற்றுமாறு அவர் கேட்டுக்கொண்டார். புத்தாண்டு விடுமுறை காலப்பகுதியில் இவ்வாறான அனர்த்தங்கள் அதிகரித்துள்ளதால், நீர்நிலைகளில் இறங்கும் போது மிகுந்த அவதானத்துடன் செயல்படுமாறு பொலிஸார் பொதுமக்களை எச்சரித்துள்ளனர். (எ)

# நுவரெலியாவில் தீப்பரவல் 3 வீடுகள் முற்றாக தீக்கிரை



நுவரெலியா, ஏப். 18
நுவரெலியா - கண்டி பிரதான வீதியில் அமைந்துள்ள பம்பரக்கலை- நெடுங்குடியிருப்பு பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு ஏற்பட்ட திடீர் தீப்பரவலால் மூன்று வீடுகள் முற்றாக தீக்கிரையாகின.

இவ்வாறு, தீக்கிரையான மூன்று வீடுகளிலும் இருந்த 12 பேர் தற்காலிகமாக உறவினர்கள் வீடுகளில் வசிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த தீப்பரவல் காரணமாக அந்த வீடுகளில் இருந்த பெறுமதியான உடைமைகள் அனைத்தும் தீயில் எரிந்து நாசமாகின.

விபத்தின்போது வீட்டில் இருந்தவர்கள், தீ எரிவதை கண்டு கூச்சலிட்டதாகவும், அதன் பிறகு அயலவர்கள் மற்றும் தகவல் அறிந்து உரிய இடத்துக்கு சென்ற நுவரெலியா மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் ஆகியோர் பெரும் முயற்சியெடுத்து தீயை அணைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் நுவரெலியா பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# அமைச்சர் லால்காந்தவிடம் 6.7 கோடி ரூபாய் சொத்துகள்

கொழும்பு, ஏப். 18
விவசாய அமைச்சர் கே.டி. லால்காந்த தன்னிடம் 6. 7 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய அசையா சொத்துக்கள் உள்ளன என்று தனது சொத்து விவர அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் சொத்துக்கள் தொடர்பில் கடந்த சில நாட்களாக சமூகத்தில் பேசப்பட்டு வந்த நிலையில், அவர் கடந்த ஆண்டு டிசெம்பர் கடைசி வாரத்தில் தனது சொத்து விவர அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின்படி, அனைத்து அரசியல்வாதிகளும் தமது சொத்து மற்றும் பொறுப்புக்கள் பற்றிய விவரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

இதன்படி, 2025 ஆம் ஆண்டுக்குரிய சொத்து விவர அறிக்கைகளை பல அரசியல்வாதிகள் ஏற்கனவே சமர்ப்பித்துள்ளனர்.

இந்த அறிக்கையில், விவரங்களை வழங்குபவரின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மட்டுமன்றி, அவரது மனைவி/கணவன், தங்கியிருக்கும் பிள்ளைகள் மற்றும் பிற நபர்களின் சொத்து விவரங்களையும் உள்ளடக்குவது கட்டாயமாகும்.

இதன் கீழ், 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளுக்காக விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால்காந்த சமர்ப்பித்துள்ள சொத்து விவர அறிக்கை குறித்து சமூக ஊடகங்களில் பலத்த விவாதம் எழுந்துள்ளது.

லால் காந்த தனது அறிக்கையை 2025 டிசெம்பர் 26 ஆம் திகதி அன்று சமர்ப்பித்துள்ளதுடன், அதனை பொது மக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல உறுதிப்படுத்தியுள்ளார்.

அந்த அறிக்கையின்படி, கே.டி. லால்காந்த தமக்குச் சொந்தமான அசையா சொத்துக்களாக குறிப்பிட்டுள்ளவை வருமாறு,

நன்கொடை உறுதி மூலம் பெறப்பட்ட சுமார் 6 மில்லியன் ரூபாய் பெறுமதியுடைய 2,500 சதுர அடி குடியிருப்பு கட்டடம் மற்றும் 10 பேர்ச் காணி.

2. 5 மில்லியன் ரூபாய் பெறுமதியுடைய 750 சதுர அடி நிரந்தரக் கட்டடம் மற்றும் 20 பேர்ச் வீட்டுத் தோட்டம்.

சுமார் 56 மில்லியன் ரூபாய் பெறுமதியுடைய 4,500 சதுர அடி குடியிருப்பு கட்டடம் மற்றும் 14 பேர்ச் காணி.

பரம்பரை உரிமையின் கீழ் பெறப்பட்ட 2. 5 மில்லியன் ரூபாய் பெறுமதியுடைய 1,500 சதுர அடி குடியிருப்பு மற்றும் வணிகக் கட்டடம்.

இவற்றைத் தவிர, அசையும் சொத்துக்களாக 4. 6 மில்லியன் ரூபாய் பெறுமதியுடைய தங்கப் பவுண் மற்றும் 4.5 மில்லியன் ரூபாய் பெறுமதியுடைய மோட்டார் வாகனம் ஆகியவற்றை அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், வருடாந்த சம்பளமாக 7 இலட்சத்து 38,918 ரூபாயும், சொத்துக்களை வாடகைக்கு விடுவதன் மூலம் 4 இலட்சம் ரூபாயும், நிலையான வைப்புக்களின் வருடாந்த வருமானமாக 27 இலட்சத்து 55,851 ரூபாயும் கிடைப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தனது தற்போதைய தொழிலின் மூலம் வருடாந்தம் 1,800,000 ரூபாய் வருமானம் கிடைப்பதாகவும் அமைச்சரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# பெரும்பாலான பகுதிகளில் வெப்பநிலை அதிகரிப்பு

## பிற்பகலில் இடியுடன் மழை

கொழும்பு, ஏப். 18
கண்டி, நுவரெலியா, மாத்தளை மற்றும் பதுளை மாவட்டங்கள் தவிர நாட்டின் ஏனைய பிரதேசங்களில் அதிகரித்த வெப்பநிலை காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்திய, சப்ரகமுவ, மேல், வடமேல், தென் மற்றும் ஊவா மாகாணங்களின் பல இடங்களில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மேல் மற்றும் தென் மாகாண கரையோரப் பிரதேசங்களிலும் அத்துடன் புத்தளம் மாவட்டத்திலும் காலை வேளையிலும் சிறிதளவு மழை பெய்யக்கூடும்.

சப்ரகமுவ மாகாணத்தின் சில இடங்களிலும் அத்துடன் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் சில இடங்களிலும் 50 மில்லிமீற்றரிலும் கூடிய ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சிலாபம் தொடக்கம் கொழும்பு, காலி, மாத்தறை ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 20 - 30 கிலோமீற்றர் வேகத்தில் தென்மேற்கு திசையில் இருந்து அல்லது மாறுபட்ட திசைகளில் இருந்து காற்று வீசும்.

நாட்டைச் சூழ உள்ள கடல் பிராந்தியங்கள் இடைக்கிடையே ஓரளவு கொந்தளிப்பாக காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசுவதுடன் அவ்வேளைகளில் கடல் பிராந்தியங்கள் தற்காலிகமாக மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மத்திய கிழக்கில் பதுங்கியிருந்த பாதாள உலகக்கும்பல் சிக்கியது

கொழும்பு, ஏப். 18
டுபாய் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளில் பதுங்கியிருக்கும் குற்றவாளிகளை கைது செய்வதற்காக அந்த நாட்டு பாதுகாப்பு படையினர் முன்னெடுத்த விசேட நடவடிக்கைகளின் போது, இலங்கையை சேர்ந்த பல குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்படும் குற்றவாளிகளை இலங்கைக்கு கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கையில் இடம்பெறும் பெரும்பாலான குற்றச் செயல்கள் டுபாய் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளில் பதுங்கியிருக்கும் குற்றவாளிகளாலேயே வழிநடத்தப்படுவதாக பாதுகாப்பு படையினர் கண்டறிந்துள்ளனர்.

இவர்கள் ஈரானில் உள்ள போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் நேரடித் தொடர்புகளை பேணி இலங்கைக்கு போதைப்பொருட்களை அனுப்பி வைப்பதும் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது தெரியவந்துள்ளது.

இதற்கமைய, வெளிநாடுகளில் இருக்கும் குற்றவாளிகளுக்கு எதிராக சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும், அவர்களை கைது செய்ய அந்த நாட்டு அதிகாரிகள் கடந்த காலங்களில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

எவ்வாறாயினும், தற்போது ஈரான் மத்திய கிழக்கு பிராந்திய நாடுகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு வருவதால், ஈரானிய குற்றவாளிகளுடன் தொடர்புகளை பேணும் நபர்களைக் கண்டறிய அந்த நாடுகள் விசேட நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன என்று பொலிஸார் கூறினர்.

இதன் விளைவாக, இலங்கையை சேர்ந்த பல குற்றவாளிகள் ஏற்கனவே மத்திய கிழக்கு நாடுகளில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் படுவத்தே சாமர, மோதர நிபுன, பரேவி சுதா உள்ளிட்ட பல முக்கிய குற்றவாளிகள் இருப்பதாக தகவல்கள் வெளியான போதிலும், இதுவரை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை.

இது குறித்து தமக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்குமாறு இலங்கை பொலிஸார் மத்திய கிழக்கு நாடுகளிடம் பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

இந்தக் கைது நடவடிக்கைகள் காரணமாக, தற்போது பல குற்றவாளிகள் மத்திய கிழக்கிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு தப்பிச் செல்ல முயற்சிப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ)

# 300 அடி பள்ளத்துக்குள் பாய்ந்து கார் விபத்து

ஹற்றன், ஏப். 18
ஹற்றன் - பொகவந்தலாவை பிரதான வீதியில் சென்றுகொண்டிருந்த கார் ஒன்று, சென் ஜோன் டிலரி பகுதியில் வீதியை விட்டு விலகி சுமார் 300 அடி பள்ளத்தில் பாய்ந்து, கெசல்கமுவ ஓயாவில் விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்து நேற்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் இடம்பெற்றது.

பலாங்கொட பகுதியிலிருந்து கண்டி நோக்கி பயணித்த கார் விபத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவ இடத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்ததோடு, காரின் சாரதி மற்றும் இரண்டு பெண்கள் என மூன்று பேர் காயங்களுக்கு உள்ளாகினர்.

இவர்கள் அனைவரும் பலாங்கொட பகுதியை சேர்ந்தவர்கள் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

விபத்து ஏற்பட்டமைக்கான காரணத்தை கண்டறிய பொகவந்தலாவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## விகாராதிபதியின்...

தையி ட்டிப் பகுதி மக்கள் பின்னர் ஏமாற் றத்துடன் திரும்பிச் சென்றனர்.

தையிட்டி விகாரை அமைந்து ள்ள காணியின் உரிமையாளர்க ளில் 17 பேரின் காணிகளை நேற்று வெள்ளிக்கிழமை அளவீடு செய்வது எனவும், அதற்கு காணி உரி மையாளர்கள் சம்மதிக்க வேண்டும் எனவும் கடந்த

11ஆம் திகதி கடற்தொழில் அமைச்சர் இ.சந்திர சேகர் மற்றும் மாவட்ட செயலர் ம.பிரதீபன் ஆகியோர் காணி உரிமையாளர்களிடம் கோரி இருந்தனர்.

அதன் அடிப்படையில் நேற்று காணி அளவீட்டுப் பணிகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் தையிட்டி விகாராதிபதி ஜின்தோட்டை நந்தாராம தேரர், விகாரை காணியை சட்டவிரோதமாக அளவீடு செய்ய முயல்வதாக பலாலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

முன்னர் அறிவிக்கப்பட்டமைக்கு அமைவாக நேற்றுக் காணி உரிமையாளர்கள், நில அளவை திணைக்கள உத்தியோகத்தர்கள் விகாரை பகுதிக்கு காலை 9 மணிக்கு வருகை தந்திருந்தனர்.

இருந்தபோதிலும் காணிகளை அடையாளம் காட்ட வருமாறு காணி உரிமையாளர்களுக்கு அழைப்பு விடுத்த கடற்தொழில் அமைச்சர், மாவட்ட செயலர், தெல்லிப்பளை பிரதேச செயலர் உள்ளிட்ட எவரும் அவ்விடத்துக்கு காலை 9.30 மணி வரை வருகை தரவில்லை. இந்நிலையில் விகாரை அமைந்துள்ள பகுதியில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு இருந்தமையால் காணி உரிமையாளர்கள் மத்தியில் குழப்பமான நிலைமை ஏற்பட்டது.

முற்பகல் 10 மணியளவில் அவ்விடத்துக்கு வருகை தந்த மாவட்ட செயலர் உள்ளிட்ட அதிகாரிகள், காணி அளவீடு செய்வதற்கு கொழும்பில் இருந்து விசேட குழு வருகை தர வேண்டும் எனவும், அதனால் ஒரு மாத காலப் பகுதிக்குள் காணி அளவீட்டுப் பணிகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் காணி உரிமையாளர்களிடம் தெரிவித்துள்ளனர்.

இதனால் காணி உரிமையாளர்கள் விசனமடைந்தனர்.

“கடந்த பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற கூட்டத்தில் காணி அளவீடு செய்வது என பேசப்பட்டுள்ளது. அந்தக் கூட்டத்தில் பிக்குவும் கலந்து கொண்டிருந்தார். எம்மை அந்தக் கூட்டத்துக்கு அழைக்கவில்லை. இதுவரை கொழும்பில் நடைபெற்ற மூன்று கூட்டங்களுக்கும் எம்மை அழைக்கவில்லை. அந்த கூட்டங்களில் என்ன பேசப்பட்டது, என்ன தீர்மானிக்கப்பட்டது என்பது தொடர்பில் எமக்கு எவரும் கூறவில்லை. அந்த கூட்ட அறிக்கைகள்கூட எமக்கு தரப்படவில்லை.

அவ்வாறான நிலையில் பிக்கு தனக்கு காணி அளவீடு செய்வது தொடர்பில் அறிவிக்கவில்லை எனக் கூறி அளவீட்டுப் பணிகளை தடுத்து நிறுத்தியுள்ளார்.

ஆனால் மாவட்ட செயலர், கொழும்பில் இருந்து விசேட குழு வரவேண்டும். அதன் பின்னரே காணிகளை அளவீடு செய்ய முடியும் என கூறிச் சென்றுள்ளார்.

இதுவரை காணி உரிமையாளர்கள் தான் விகாரை பிரச்னையை தீர்க்க விரும்பவில்லை எனக் கருத்து கூறி வந்தார்கள். நாம் இன்று காணிகளை அளவீடு செய்ய சம்மதித்தபோதிலும் பிக்குவின் தலையீட்டால் காணி அளவீட்டுப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. யார் பிரச்னைக்குரியவர்கள் என தற்போது எல்லோருக்கும் தெரிந்திருக்கும்.

காணி அளவீட்டுக்கு இன்று எம்மை வருமாறு கூறிவிட்டு கடற்தொழில் அமைச்சரோ, அவரின் பிரதி நிதிகளோ, தேசிய மக்கள் சக்தியினரோ யாரும் விகாரைப் பகுதிக்கு வரவில்லை” என காணி உரிமையாளர்கள் தெரிவித்தனர். (அ)

## நிலக்கரி கொள்வனவு...

ஆதித்ய படபெந்திகே மற்றும் மேல் நீதிமன்ற நீதியரசர் சஞ்சீவ சோமரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் நிலக்கரி சார்ந்த மின் உற்பத்தி செயல்முறை ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் 2026 ஏப்ரல் 16 ஆம் திகதியுடன் முடிவடைந்த காலப்பகுதிக்குள், அரசுக்குச் சொந்தமான லங்கா நிலக்கரி நிறுவனம் அல்லது அதன் சார்பாக இலங்கைக்கு நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டபோதும் மற்றும் மின் உற்பத்தியின் போதும் முறைகேடுகள் அல்லது சட்டவிரோத செயல்கள் இடம்பெற்றுள்ளனவா என்பது குறித்து விசாரணை செய்வதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இந்த ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவை நியமித்துள்ளார். (அ)

## வடமராட்சியில் ஒரே...

செய்தி அந்தப் பகுதி மக்களிடையே பெரும் மகிழ்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பிறந்த நான்கு குழந்தைகளில் இரு ஆண் குழந்தைகள், இரு பெண் குழந்தைகள் அடங்குவதாக மருத்துவத் தரப்புகள் உறுதிப்படுத்தியுள்ளன.

ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகள் பிறப்பது மிகவும் அரிதான ஒரு நிகழ்வாகும். தற்போது தாயும் குழந்தைகளும் நலமாக இருப்பதாகத் தெரியவருகிறது. (அ)

# சட்ட அமுலாக்க அமைப்புகள் மீது அரசியல் அழுத்தங்கள் அதிகரிப்பு

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 18

சட்ட அமுலாக்க அமைப்புகள் மீது தற்போதைய அரசாங்கம் கடுமையான அரசியல் அழுத்தங்களை செலுத்தி வருவதாக பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பு பத்தரமுல்லையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பொலிஸ், குற்றப்புலனாய்வுத் திணைக்களம், இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, நீதித்துறை மற்றும் சிறைச்சாலைத் துறை போன்ற முக்கிய அமைப்புகள் அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றன என அவர் குறிப்பிட்டார்.

சிறைச்சாலைகள் ஆணையாளர் துஷார உப்புல்தெனிய சட்டவிரோதமாக நீக்கப்பட்டதாகவும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிள்ளையான் கைது செய்யப்பட்டமை அரசியல் பழிவாங்கலின் ஒரு பகுதியாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், பயங்கரவாதத் தடைச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதாகவும், அரசாங்கத்தின் இத்தகைய நடவடிக்கைகள் ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலாக உள்ளதாகவும் சாகர காரியவசம் தெரிவித்தார்.

நாட்டின் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் பாதுகாக்க மக்கள் இவ்வாறான செயல்பாடுகளை கவனிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (அ)

## எரிசக்தி அமைச்சின்...

நியமன ஆணை நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி செயலாளர் நந்திக சனத் குமநாயக்கவால் அதிகாரபூர்வமாக வழங்கப்பட்டது.

இலங்கை திட்டமிடல் சேவையின் சிரேஷ்ட அதிகாரியான அபோன்சு, முன்னதாக தமது ராஜினாமாவைச் சமர்ப்பித்த பேராசிரியர் உதயங்க ஹேமபாலவுக்குப் பதிலாக பதவியேற்கிறார்.

அபோன்சு இதற்கு முன்னர் நிதி மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளராகப் பணியாற்றியுள்ளார். தேசியத் திட்டமிடல், அரசு நிதி மேலாண்மை, பேரியல் பொருளாதார முன்னறிவிப்பு, வளர்ச்சி நிதியளிப்பு, நிதிப் பகுப்பாய்வு, வரிக் கொள்கை மற்றும் உயர்கல்வித் திட்டமிடல் ஆகியவற்றில் அவருக்கு விரிவான அனுபவம் உள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் அவர் பணியாற்றிய காலத்தில், நிதி மற்றும் பொருளாதார விவகாரப் பிரிவுக்குத் தலைமை தாங்கி, பொருளாதார ஆளுகை மற்றும் தேசிய வளர்ச்சி முன்னுரிமைகள் குறித்த மூலோபாயக் கொள்கை வழிகாட்டுதலை வழங்கினார். (அ)

## லால் காந்தவின்...

முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் கே.டி. லால் காந்த 2024 மற்றும் 2025ஆம் ஆண்டுகளுக்கு அமைவாக கடந்த ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி சமர்ப்பித்த சொத்து விவர அறிக்கை தற்போது சமூக வலைத்தளங்களில் பேசு பொருளாகியுள்ளது.

தனக்கு 6.7 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய அசையா சொத்துக்கள் உள்ளதாக அமைச்சர் தனது சொத்து விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளமையும், ஆனால் சில வருடங்களுக்கு முன்னர் தனது செலவுகளைக் கூட ஈடு கட்டுவது கடினம் என அவர் தெரிவித்திருந்த கருத்தையும் கருத்திற் கொண்டு இந்த முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## தையிட்டி விகாரை...

அதற்கு காணி உரிமையாளர்கள் சம்மதிக்கவேண்டும் எனவும் கடந்த 11ஆம் திகதி கடற்தொழில் அமைச்சர் இ.சந்திரசேகரர் மற்றும் மாவட்ட செயலர் ம. பிரதீபன் ஆகியோர் காணி உரிமையாளர்களிடம் கோரி இருந்தனர்.

அதன் அடிப்படையில் நேற்று காணி அளவீட்டுப் பணிகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் தையிட்டி விகாரை விகாராதிபதி ஜின்தோட்டை நந்தாராம தேரர், விகாரை காணியை சட்டவிரோதமாக அளவீடு செய்ய முயல்வதாக பலாலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதேவேளை, நேற்று முன்தினம் இரவு மூன்று பஸ்களில் தென்னிலங்கையில் இருந்து விகாரை வழிபாட்டுக்கு என பலர் வருகை தந்து விகாரையில் தங்கியுள்ளனர்.

இந்நிலையில், நேற்றுக் காலை பலாலி பொலிஸார் விகாரை அமைந்துள்ள பகுதியில் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

அதேவேளை, தமது காணிகளை அடையாளம் காட்ட என காணி உரிமையாளர்கள் விகாரை பகுதிக்கு சென்றனர்.

இருந்தபோதிலும் காலை 09.30 மணி வரையில் காணி அளவீட்டுப் பணிகளுக்கு காணிகளை அடையாளம் காட்ட வருமாறு காணி உரிமையாளர்களுக்கு அழைப்பு விடுத்த கடற்தொழில் அமைச்சர், மாவட்ட செயலர், தெல்லிப்பளை பிரதேச செயலர் உள்ளிட்ட எவரும் அவ்விடத்திற்கு வருகை தராத நிலையில் காணி உரிமையாளர்கள் மத்தியில் அச்ச நிலை உருவாகியது.

அதேவேளை, காணி அளவீட்டுப் பணிகள் தொடர்பில் புத்த சாசன அமைச்சோ , மாவட்ட செயலரோ தனக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தல் எதனையும் வழங்கவில்லை. உத்தியோகபூர்வ அறிவித்தல் எதுவும் இல்லாமல் விகாரை காணிகளை அளவீடு செய்ய அனுமதிக்க முடியாது என விகாராதிபதி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். (அ)

## இலங்கை பொருளாதார...

இந்தநிலையில், இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்தைப் பாராட்டியுள்ள சர்வதேச நாணய நிதிய முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா, நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் 5 மற்றும் 6-வது மீளாய்வுகளுக்கான உடன்பாட்டை எட்டியதற்காக பாராட்டுக்களை தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையின் பொருளாதார மீட்சிக்குத் தொடர்ந்து ஆதரவளிப்பதாக அவர் உறுதியளித்துள்ளார்.மத்திய கிழக்கில் நிலவும் மோதல்கள் மற்றும் சமீபத்திய சூறாவளியால் ஏற்பட்ட பாதிப்புகள் இலங்கைக்குப் பெரும் சவாலாக அமைந்திருப்பதை சர்வதேச நாணய நிதியம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இருப்பினும், எரிசக்தி விலைகளில் உரிய மாற்றங்களைக் கொண்டு வருமாறும், கொள்கை ரீதியான ஒழுக்கத்தைத் தொடர்ந்து பேணுமாறும் இலங்கை அதிகாரிகளை சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது. (அ)

## நாளை கொழும்பு...

இந்திய துணை ஜனாதிபதி சி.பி.இராதாகிருஷ்ணன் இரு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நாளை ஞாயிற்றுக்கிழமை நாட்டுக்கு வருகிறார்.

இவ்விஜயத்தின்போது துணை ஜனாதிபதி இராதாகிருஷ்ணன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரினி அமரசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.30 மணிக்கு கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் துணை ஜனாதிபதி இராதாகிருஷ்ணனுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நடைபெறவிருப்பதுடன், அதே தினத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதிநிதிகளையும் துணை ஜனாதிபதி சந்திப்பார்.

அதனைத் தொடர்ந்து பி.ப 3.30 மணியளவில் கொழும்பு பம்பலப்பிட்டி கதிரேசன் கோவிலில் மத வழிபாடுகளில் ஈடுபடவுள்ள துணை ஜனாதிபதி, புதிய கதிரேசன் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கோவில் அறங்காலவர் சபை உறுப்பினர்கள் மற்றும் இந்திய வம்சாவளி பிரமுகர்களுடனான சந்திப்பிலும் கலந்துகொள்ளவுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# மாகாண தேர்தல் சட்டச் சிக்கலை தெரிவுக் குழு விரைவாக தீர்க்கும்!

## தேர்தல் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 18

புத்தாண்டு காலத்திற்கும் மேலாகத் தாமதிக்கப்பட்டு வரும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தடையாக உள்ள சட்டச் சிக்கல்களை பாராளுமன்றத் தெரிவுக்குழு விரைவாகத் தீர்க்கும் என எதிர்பார்ப்பதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க, தேர்தலைத் தொடர்ந்து ஒத்திவைப்பது வாக்காளர்களுக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும் இழைக்கப்படும் பாரிய அநீதி எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை எந்தத் தேர்தல் முறையின் கீழ் நடத்துவது என்பது குறித்து ஆராய்வதற்காக, அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் 11 பேர் கொண்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு அண்மையில் நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுவின் பரிந்துரைகள் கிடைத்த பின்னரே தேர்தல் குறித்த இறுதி முடிவை எடுக்க முடியும் எனத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளருக்குப் பலமுறை கடிதங்கள் எழுதப்பட்ட போதிலும், விடயம் தற்போது பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் கீழ் உள்ளதாகப் பதில் கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.



கடைசியாக 2014 ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெற்ற நிலையில், தொகுதி எல்லை நிர்ணய அறிக்கையில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாகத் தேர்தல் தொடர்ந்து இழுபறி நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எங்களுக்கு மானியம் வேண்டாம் உர விலை குறைப்பே வேண்டும்!

## தேயிலை தோட்ட உரிமையாளர்கள் சங்கம்

கொழும்பு, ஏப். 18

அரசாங்கத்தினால் சிறுதோட்ட தேயிலை உரிமையாளர்களுக்கு வழங்கப்படவுள்ள உர மானியம் முறையாகப் பகிர்ந்தளிக்கப்படுவதில்லை எனவும், தமக்குத் தேவை மானியம் அல்ல, உரத்தின் விலைக்குறைப்பே எனவும் தேசிய தேயிலை தோட்ட உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தச் சங்கத்தின் தலைவர் சமன் கீகனகே தெரிவிக்கையில், உர மானியத்தைப் பெற்றுக் கொள்வதற்காக விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் யதார்த்த மற்றவை எனக் குறிப்பிட்டார்.

உர மானியத்தைப் பெறுவதற்கு ஒரு மாதத்திற்கு சராசரியாக 150 கிலோ தேயிலைக் கொழுந்து பறித்திருப்பதை உறுதிப்படுத்தவேண்டும். தொழிலாளர் தட்டுப்பாடு போன்ற காரணங்களால் பல தோட்ட உரிமையாளர்களால் இந்த இலக்கை எட்ட முடிவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக 9,500 ரூபாவாக இருந்த 50 கிலோ உரப்பொதி ஒன்றின் விலை, மத்திய கிழக்கு பதற்ற நிலைமைகளைத் தொடர்ந்து 12,000 ரூபாவாக உயர்ந்துள்ளது. இது தோட்ட உரிமையாளர்களுக்கு பெரும் சுமையாக மாறியுள்ளது.

எமக்கு மானியம் வழங்குவதை விட, தேயிலை உரத்திற்கான வரியைக் குறைத்தால் எமக்குத் தேவையான நேரத்தில் நாமே உரத்தைக் கொள்வனவு செய்ய முடியும், என சமன் கீகனகே தெரிவித்தார். (அ)

# பஸ் கட்டணம் செலுத்துவதற்கு விரைவில் பிரத்தியேக அட்டை!

கொழும்பு, ஏப். 18

பொதுப் போக்குவரத்து சேவையை நவீனமயப்படுத்தும் நோக்கில், இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்களில் பயணக் கட்டணங்களைச் செலுத்துவதற்காக பிரத்தியேக அட்டை முறையை அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக சபையின் தலைவர் சஜீவ கனகரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் சேவைகளை முழுமையாக டிஜிற்றல் மயமாக்கும் இலக்கின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் சில மாதங்களுக்குள் இப்புதிய முறைமையை நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாக தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுப் போக்குவரத்துத் துறையில் அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் பாரிய தொழில்நுட்ப மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் பயணிகள் பணத்தை நேரடியாகக் கையாள்வதைத் தவிர்த்து, இலகுவான மற்றும் பாதுகாப்பான முறையில் கட்டணங்களைச் செலுத்த வழிவகை செய்யப்படும். (அ)

# பிள்ளையானின் சிறைவாசத்துக்கு எதிர்ப்பு; தொண்டர்கள் உண்ணாவிரதப் போராட்டம்!



மட்டக்களப்பு, ஏப். 18

பிள்ளையானின் சிறைவாசத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கட்சித் தொண்டர்கள் கறுப்புப் பட்டியால் வாயைக் கட்டி அமைதியான முறையில் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு, காந்திபூங்காவில் நேற்று வெள்ளிக்கிழமை காலை முதல் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனை வெலிக்கடை சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டிருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கட்சியின் தொண்டர்கள் கறுப்புப் பட்டியால் வாயைக் கட்டி அமைதியான முறையில் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# மந்திகை விபத்தில் ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஏப். 18

மந்திகை வீதி அபிவிருத்தி அதிகார சபை அலுவலகத்துக்கு முன்பாக நேற்று ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து ஒன்று இடம்பெற்றது.

அதிவேகமாக வந்த வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதில் இந்த விபத்து நேர்ந்துள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த விபத்தின் போது ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கலை, விளையாட்டுக்களின் மூலம் மாணவர் நற்பண்புகளை வளர்த்துக் கொள்ள முடியும்!

## வடக்கு மாகாண ஆளுநர் அறிவுரை

யாழ்ப்பாணம், ஏப். 18

மாணவர்கள் தங்களது கல்விக்கு மேலதிகமாக கலை மற்றும் விளையாட்டுக்களில் திறமைகளை வெளிப்படுத்துவதற்கு சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்ட நிகழ்வுகள் சிறந்த வாய்ப்பாக அமைந்திருக்கின்றன. இவ்வாறான மேலதிக செயற்பாடுகளில் மாணவர்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வதன் ஊடாகவே, தங்களின் தலைமைத்துவம் உள்ளிட்ட நற்பண்புகளை வளர்த்துக்கொள்ள முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு விளையாட்டுத் திணைக்களத்துடன் இணைந்து நடத்திய "வடக்கு மாகாண சித்திரைப் புத்தாண்டு கொண்டாட்டம் - 2026", கரவெட்டி இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று வெள்ளிக்கிழமை அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றுகையிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மேலும் குறிப்பிடுகையில்-

இந்தச் சித்திரைப் புத்தாண்டு என்பது தமிழ் மற்றும் சிங்கள மக்கள் இருவருக்கும் பொதுவானது. இரண்டு இனங்களும் ஒன்றிணைந்து கொண்டாடும் ஒரே பண்டிகையாகவும் இது விளங்குகின்றது. இவ்வாறான கொண்டாட்டங்கள் ஊடாக ஒருவரது கலாசாரம் மற்றும் பண்பாடுகளை மற்றவர் அறிந்துகொள்வதற்கும், புரிந்துணர்வை வளர்த்துக்கொள்வதற்கும் பேருதவியாக இருக்கும். இன்றைய தினம் கலை நிகழ்வுகளைச் செய்த மாணவர்கள் தங்களது ஆற்றல்களை மிகச் சிறப்பாக வெளிப்படுத்தியிருந்தார்கள்.

உண்மையில், இன்றைய இந்தக் கொண்டாட்டம் என்பது வெறும் கொண்டாட்டமாக மாத்திரமன்றி எமது பாரம்பரிய கலாசார பழக்க வழக்கங்கள், விளையாட்டுக்கள் மற்றும் உணவு வகைகளை எமது கண்முன்னே மீளக்கொண்டு வந்திருக்கின்றது - என்றார்.

முன்னதாக, விழா மைதானத்துக்கு வருகை தந்த விருந்தினர்கள் பாரம்பரிய முறைப்படி கௌரவமாக வரவேற்று அழைத்து வரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து, மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த தமிழ் மற்றும் சிங்களப் பாரம்பரியக் குடில்களை ஆளுநர் உள்ளிட்ட விருந்தினர்கள் பார்வையிட்டனர். மைதானத்தில் மாணவர்களின் கண்கவர் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், உள்ளூர் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகள் அடங்கிய கண்காட்சிக்கூடங்களையும் விருந்தினர்கள் பார்வையிட்டனர்.

இந்நிகழ்வில் வன்னித் தேர்தல் மாவட்டத்தின் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்களித் தலைவரும் கூட்டுறவுத்துறை பிரதியமைச்சருமான உபாலி சமரசிங்க, கரவெட்டி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜெ.றஜீவன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (அ)

# இன்று முதல் மீண்டும் கியூ.ஆர்.

கொழும்பு, ஏப். 18

பெற்றோல் வாகனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த தற்காலிக கியூ.ஆர். விலக்கு நடைமுறை, நேற்று நள்ளிரவுடன் நிறைவுக்கு வந்தது

இந்நிலையில் இன்று முதல் கியூ.ஆர் குறியீட்டு முறை மீண்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.